

# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## சட்டமன்றத் தொகுதி பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் **உதயநிதி ஸ்டாலின்** அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம்.

இதுவரை மூன்று சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயற்சி நடைபெற்று முடிந்துள்ள நிலையில், மண்டலம் 7, 8 – இல் உள்ள கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு.

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 12/11/2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | 8 | போடி | ஸ்ரீ வான்மதி மஹால், போடி – முந்தல் பிரதான சாலை, போடிநாயக்கனூர், தேனி. |
| | மாலை 4.00 மணி | | பெரியகுளம் | என்.ஆர்.டி. திருமண மஹால், என்.ஆர்.டி.சாலை, தேனி. |
| 13/11/2024 புதன்கிழமை | காலை 9.00 மணி | 7 | நாகப்பட்டினம் | ஏ.எஸ்.ஏ.அம்பிகாபதி திருமண மண்டபம், பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம். |
| | மாலை 4.00 மணி | | கீழ்வேளூர் | எம்.வி.கே. திருமண மண்டபம், திருக்குவளை, நாகப்பட்டினம். |
| | காலை 9.00 மணி | 8 | ஆண்டிப்பட்டி | ஸ்ரீ பாண்டியன் மீனாட்சி திருமண மண்டபம், மின் வாரிய அலுவலகம் அருகில், எஸ்.எஸ்.புரம், ஆண்டிப்பட்டி, தேனி. |
| | மாலை 4.00 மணி | | கம்பம் | கம்பம் நா.நடராஜன் நினைவுத் திருமண மண்டபம், கம்பம், தேனி. |
| 14/11/2024 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | 8 | தென்காசி | ஸ்ரீ சாரதாம்பா திருமண மண்டபம், இலஞ்சி, தென்காசி மாவட்டம். |
| | மாலை 4.00 மணி | | கடையநல்லூர் | எஸ்.எஸ்.கிராண்ட் மஹால், அச்சம்பட்டி பேருந்து நிலையம் அருகில், கடையநல்லூர் – தென்காசி பிரதான சாலை, தென்காசி மாவட்டம். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில் இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 09-11-2024

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

# செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில் தி.மு.க. பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. – அப்துல் மாலிக் பங்கேற்பு!

செஞ்சி, நவ 12-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம்சிங்கவரம் , பொன்பத்தி,மேல் எடையாளம்,ஊரணி தாங்கள், ஜெயங்கொண்டான், கோனை, அப்பம்பட்டு ஆகிய ஊராட்சியின் பாக முகவர்கள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் அப்பம்பட்டில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவரும் செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளருமான விஜயகுமார் தலைமை தாங்கினார். மாவட்டப் பிரதிநிதி அய்யாதுரை அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில்விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவரும் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளரும்,செஞ்சிசட்டமன்ற தொகுதி பார்வையாளர் அப்துல் மாலிக்கலந்து கொண்டு ஓட்டுச்சாவடி பாக முகவர்களிடம் கருத்துகளை கேட்டறிந்தார்.

இதைத் தொடர்ந்து மாநில இளைஞரணி துணை செயலாளரும், தொகுதி பார்வையாளருமான அப்துல் மாலிக் பேசுகையில்:

கட்சி நிர்வாகிகள் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டசபை தொகுதி தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும். ஓட்டு சாவடி பாக முகவர்கள் தங்கள் பகுதியில் உள்ள வாக்காளர்கள் பட்டியலில் பெயர்கள் சரியாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். நடைபெற உள்ள வாக்காளர்கள் திருத்தம்சிறப்பு முகாமில் பாகமுகவர்கள் அனைவரும் கலந்து கொண்டு 18 வயது பூர்த்தியடைபவர்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெறாதவர்களையும், புதியதாக குடிபெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும், புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள்,மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், சேர்க்கவும் உதவிட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் செந்தமிழ் செல்வன், விஜயராகவன், பச்சையப்பன், ஜெயபால், அரங்க ஏழுமலை, மணிவண்ணன், ஆனந்த், ஆறுமுகம், குமார், மதியழகன், அனுசுயா மணிபாலன், இக்பால், குணசேகரன், கோட்டீஸ்வரன், அனையேரி ரவி, பழனி, உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட பொம்மிகுப்பம் ஊராட்சி ஆத்துமேடு பகுதி சுடுகாட்டிற்கு எரிமேடை, சுற்றுச்சுவர், காரியமேடை அமைத்திட 20லட்சமும், பழைய அத்திகுப்பம் கிராமத்தில் 2கி.மீ தூரத்திற்கு ரூ.30லட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் (MGNREGS) வாயிலாக ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய பணியினை திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள்.எல்.சிவலிங்கம், எஸ்.சரவணன், சின்னபையன், எஸ்.சி.விஜயகுமார், பழனி, விஜயகுமார், ரகு, சாமண்ணன், அண்ணாமலை கிளை செயலாளர்கள், கழக முன்னோடிகள் என திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதுவரை ரூ.6 கோடியே 11 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

# கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

# நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

## இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர், பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி ரூ. 6 கோடியே 11 லட்சத்து 90 ஆயிரம். இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2.00.000/- (இரண்டு லட்சம்)** 11–11–2024 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | பி. கலைச்செல்வம், இராணிமகாராஜபுரம், அடைக்கலாபுரம், தூத்துக்குடி | 25,000/– |
| 2. | சு.இசக்கியம்மாள் (எ) சுப்புலெட்சுமி, தச்சநல்லூர், திருநெல்வேலி மாவட்டம் | 25,000/– |
| 3. | கே.ராமர், கழக சொற்பொழிவாளர், திருவில்லிபுத்தூர், விருதுநகர் மாவட்டம் | 25,000/– |
| 4. | அ. முபாரக், முஸ்லீம் நடுத் தெரு, திருப்புவனம்புதூர், சிவகங்கை மாவட்டம் | 25,000/– |
| 5. | மு.ஆதம்முகமது, சம்மாட்டி அப்பா தெரு, மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம் | 25,000/– |
| 6. | கோ.பெரியசாமி, பாலசமுத்திரம், பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம். | 25,000/– |
| 7. | இரா.பாலு, பஜனை மடத் தெரு, அச்சம்பத்து, மதுரை – 625 019. | 25,000/– |
| 8. | எம்.முருகன், தெக்காலூர் ஆதிதிராவிடர் காலனி, நஞ்சியம்பாளையம், திருப்பூர் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

பட்டாசுத் தொழிலை காக்க - லட்சக்கணக்கான தொழிலாளர்களை காப்பாற்ற

# முதல்வர் எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை!

## 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, நவ. 12-

பட்டாசுத் தொழிலை காக்க - லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் காப்பாற்ற முதல்வர் எடுத்துவரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது.

இதுகுறித்து 11.11.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில்கூறியிருப்பதாவது:-



தினகரன்
நவம்பர் 11, 2024 திங்கட்கிழமை
முதல்வரின் கருணை
இந்திய அளவில் பட்டாசு அல்லது தீப்பெட்டி தொழில் என்றாலே சிவகாசியும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளுமே நினைவுக்கு வரும். இந்தியாவில் முதன்முறையாக கொல்கத்தாவில் தீப்பெட்டி ஆலை தொடங்கப்பட்டாலும், சிவகாசியே பின்னர் அதன் உற்பத்திக் கூடமாக மாறியது. 1923ம் ஆண்டில் சிவகாசியில் முதன் முதலாக தீப்பெட்டி தொழிற்சாலை தொடங்கப்பட்டு, இன்று வரை அங்கு தீப்பெட்டி மற்றும் பட்டாசுகள் உற்பத்தி கொடிகட்டி பறக்கின்றன.
ஒளிவீசும் தீக்குச்சிகளையும், பட்டாசுகளையும் உற்பத்தி செய்யும் அந்த தொழிலாளர்களின் வாழ்வில் ஒளி உள்ளதா என்றால், இல்லை

இந்திய அளவில் பட்டாசு அல்லது தீப்பெட்டி தொழில் என்றாலே சிவகாசியும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளுமே நினைவுக்கு வரும். இந்தியாவில் முதன்முறையாக கொல்கத்தாவில் தீப்பெட்டி ஆலை தொடங்கப்பட்டாலும், சிவகாசியே பின்னர் அதன் உற்பத்திக் கூடமாக மாறியது. 1923-ம் ஆண்டில் சிவகாசியில் முதன்முதலாக தீப்பெட்டி தொழிற்சாலை தொடங்கப்பட்டு, இன்று வரை அங்கு தீப்பெட்டி மற்றும் பட்டாசுகள் உற்பத்தி கொடிகட்டி பறக்கின்றன.

ஒளிவீசும் தீக்குச்சிகளையும், பட்டாசுகளையும் உற்பத்தி செய்யும் அந்த தொழிலாளர்களின் வாழ்வில் ஒளி உள்ளதா என்றால், இல்லை என்பதே பதிலாக இருந்தது. தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகே அத்தொழிலாளர்களின் வாழ்க்கை மறுமலர்ச்சியை நோக்கி பயணிக்க தொடங்கியது. கையினால் செய்யப்படும் தீப்பெட்டி மீதான 8 சதவீத வரியை ரத்து செய்து, லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயத்தை தடுத்தது தி.மு.க. அரசுதான்.

தீப்பெட்டி தொழிலாளர்களின் வாழ்வதாரத்தை காப்பாற்ற, நாடாளுமன்றத்தில் தி.மு.க. குரல் கொடுத்ததால், சீன லைட்டர்களின் இறக்குமதி தடுக்கப்பட்டது. தீப்பெட்டி மூலப்பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள ஜி.எஸ்.டி. வரியை ரத்து செய்ய குரல் கொடுத்ததும் திராவிட மாடல் ஆட்சிதான் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. பட்டாசு தொழில் வளர்ச்சிக்கும் தி.மு.க. ஆற்றிய பங்களிப்பு ஏராளம். அந்த வகையில் 2 நாள் விருதுநகருக்கு கள ஆய்வு பயணம் மேற்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், பட்டாசு தொழிலாளர்களுடன் பேசி, அவர்கள் குறைகளை கேட்டறிந்துள்ளார். பட்டாசு தொழிற்சாலைகளுக்கு சென்று பட்டாசுகள் தயாரிப்பதற்கு ரசாயனப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் அறை, தயாரிக்கப்படும் இடங்கள் ஆகியவற்றை பார்வையிட்டுள்ளார்.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெண்களிடம் வார விடுமுறை, பணியில் சந்திக்கும் சிக்கல்கள் ஆகியவற்றை கேட்டறிந்தார். அரசின் மகளிர் உரிமைத் தொகை உங்களுக்கு கிடைக்கிறதா என்பதையும் வாஞ்சையோடு கேட்டுள்ளார். பட்டாசு ஆலை உரிமையாளர்களிடம் பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில் முறையான காப்பீடு செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் என்கிற பாரதிதாசன் வாக்கிற்கேற்ப, தொழிலாளர்கள் மீது முதல்வரின் அக்கறையை விருதுநகர் விசிட் வெளிப்படுத்துவதாக அமைந்தது.

இதுமட்டுமா, தொடர்ந்து முதல்வர் விருதுநகரில் பேசியபோது "பட்டாசுத் தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்று, பட்டாசு ஆலை வெடி விபத்தில் பலியாகும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான கல்வி செலவை அரசே ஏற்கும். இதனை மாவட்ட அளவில் உறுதி செய்ய கலெக்டர் தலைமையில் நிதியம் உருவாக்கப்படும். இதற்கென அரசு சார்பில் ரூ.5 கோடி நிதியத்திற்கு வழங்கப்படும்" என பட்டாசுச் தொழிலாளர்கள் மனம் குளிரும் வகையில் அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார்.

முதல்வரின் அறிவிப்பால் பட்டாசு, தீப்பெட்டி ஆலை தொழிலாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். பட்டாசு ஆலைக்கு முதல்வர் வந்து ஆய்வு செய்ததால், பட்டாசுத் தொழிலுக்கு விடிவு காலம் பிறந்துவிட்டதாக உரிமையாளர்களும் கொண்டாடி மகிழ்கின்றனர். சுற்றுச்சூழல் மற்றும் காற்று மாசுபடுதலை காரணம் காட்டி பட்டாசு தொழிற்சாலைகள் சில இடங்களில் மூடப்பட்டு வரும் சூழலில், அத்தொழிலை காக்கவும், அதில் ஈடுபடும் லட்சக்கணக்கான தொழிலாளர்களை காப்பாற்றவும் முதல்வர் எடுத்து வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியவை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.